[1971 டிசம்பர் 14

ஆனைவிழுந்தான் ஓடையில் அணை

*374 வினா—திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திண்டுக்கல் வட்டம், கீழ்க்கோட்டை கிராமத்தில் ஆனை விழுந்தான் ஓடையில் அணை கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், திட்ட வேலை எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) மதுரை மாவட்டம், திண்டுக்கல் வட்டம் கீழ்க்கோட்டை கிராமத்தில் ஆனைவிழுந்தான் ஓடையின் குறுக்கே ஓர் அணை கட்ட ரூபாய் 99,000 மதிப்பீட்டுச் செலவில் ஒரு திட்டத்திற்கு 1969-ல் தலைமைப் பொறியாளரால் (பாசனம்) ஒப்புதல் அளிக்கப்பட்டது அணைக்கட்டுப்பகுதி வேலையும் நான்கு கண்மாய்களுக்கான மராமத்து வேலையும் முடிந்துவிட்டன. தேவையான படுகை மட்டத்திற்கு வாய்க்காலும் வெட்டப்பட்டுள்ளது.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: இந்த ஆனைவிழுந்தான் ஓடை அணையிலிருந்து வரும் தண்ணீர் தனிப்பட்டவர்களுடைய நிலத்தில் வருவதால், தண்ணீரை அவர்கள் தடுக்கிறார்கள். ஆகவே தனியார்களுடைய நிலங்களை நஷ்டஈடு கொடுத்து சர்க்காரே எடுத்துக் கொண்டு அந்த வழியை நல்லமுறையில் பயன்படுத்த முற்படுவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். சாதிக்பாட்சா: திட்டப்படி, தனியார்கள் தங்களுடைய இடங்கள் சம்பந்தமாக ஆட்சேபணை தெரிவித்திருக்கிறார்கள். நில ஆர்ஜிதச் சட்டத்தின் கீழ் அவற்றை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சரபங்கா ஆற்றின் குறுக்கே அணை

*375 வினா—திரு. எம். பரமசிவம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சரபங்காநதி அணைக்கட்டு திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஓமலூர் தாலூக்கா பாலபாஹி கிராமத்தின் அருகே சரபங்கா ஆற்றின் குறுக்கே ஒரு நீர்த் தேக்கத் திட்டம் அமைப்பது ஆரம்ப ஆய்வில் உள்ளது.